பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

27 11 2024 **WEDNESDAY 7.15 PM**

ஆகாஷவாணி

1. வளர்ச்சியடைந்த இந்தியா தொடர்பான வினாடி – வினா போட்டியில் இளையோர் பங்கேற்க வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.
2. அதி விரைவு ரயில் உற்பத்திக்கான நடவடிக்கைகளை ரயில்வேத்துறை தொடங்கியுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
3. நாடு முழுவதும் 59 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வக்ஃப் வாரிய சொத்துக்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாக மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.
4. வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், இன்றிரவுக்குள் புயலாக வலுவடையக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. உலக இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Sydrela Das** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியா தொடர்பான வினாடி – வினா போட்டியில் இளையோர் பங்கேற்க வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கோரிக்கையை விடுத்துள்ள அவர், இந்த வினாடி – வினா போட்டியில் வெற்றிபெற்றால் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள தேசிய இளையோர் திருவிழாவில் பங்கேற்க வாய்ப்பு கிடைக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் தொடங்கிய இந்த டிஜிட்டல் வினாடி – வினாடி போட்டி அடுத்த மாதம் 5-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

15 வயது முதல் 29 வயது வரையிலான அனைவரும் இதில் பங்கேற்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

அதி விரைவு ரயில் உற்பத்திக்கான நடவடிக்கைகளை ரயில்வேத்துறை தொடங்கியுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இன்று மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், ஒரு மணிநேரத்திற்கு 280 கிலோமீட்டர் வேகத்தில் செல்லக்கூடிய ரயில் உற்பத்திக்கான வடிவமைப்புகள் தயாரிக்கப்பட்டு வருவதாக கூறினார்.

வந்தே பாரத் ரயிலின் வேகத்தை குறைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில இல்லை என்றும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெளிவுபடுத்தினார்.

<<<<<<>>>>>>

வடகிழக்கு மாநிலங்களின் சுற்றுலா வளர்ச்சிக்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

அஸ்ஸாமின் **Kaziranga** தேசிய பூங்காவில் சர்வதேச சுற்றுலா கண்காட்சியை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

வடகிழக்கு மாநிலங்களில் சுற்றுலா கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கான நிதி ஒதுக்கீட்டினை மத்திய அரசு பல மடங்கு அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

இந்த சுற்றுலா கண்காட்சி வடகிழக்கு மாநிலங்களின் சுற்றுலா வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் என்றும் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

நாடு முழுவதும் 59 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வக்ஃபு வாரிய சொத்துக்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாக மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், சம்பந்தப்பட்ட வக்ஃபு வாரியம் ஆக்கிரமிப்புகளை அகற்ற அதிகாரம் உள்ளதாக கூறினார்.

இதுதொடர்பான புகார்கள் வக்ஃபு வாரியங்கள் மற்றும் மாநில அரசுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

பாரத் நெட் திட்டத்தின்கீழ் நாடு முழுவதும் இதுவரை இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட கிராம ஊராட்சிகளுக்கு நவீன இணையதள இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக தொலைத்தொடர்புத்துறை இணையமைச்சர் திரு பெம்மசாணி சந்திரசேகர் கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், இத்திட்டத்தின்கீழ் தமிழகத்தில் மட்டும் 10 ஆயிரத்து 295 கிராமங்கள் பயனடைந்துள்ளதாக குறிப்பிட்டார்.

நாட்டில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் நவீன இணையதள சேவையை வழங்க வேண்டும் என்ற நோக்கில் இந்த திட்டம் ஒரு லட்சத்து 39 ஆயிரத்து 579 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு பெம்மசாணி சந்திரசேகர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மகாராஷ்ட்ராவில் புதிய முதலமைச்சரை தேர்ந்தெடுப்பதற்கான ஆலோசனைக்கூட்டம் நாளை நடைபெறவுள்ளதாக இடைக்கால முதலமைச்சர் திரு ஏக்நாத் ஷிண்டே கூறியுள்ளார்.

தானேயில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த கூட்டத்தில் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா பங்கேற்க உள்ளதாக தெரிவித்தார்.

இதில் பிஜேபி மற்றும் கூட்டணி கட்சிகள் புதிய முதலமைச்சர் தேர்வு குறித்து விரிவாக ஆலோசனை நடத்தவுள்ளதாகவும் அவர் கூறினார்.

பிஜேபி தலைமையிலான கூட்டணி மேற்கொள்ளும் எந்த முடிவினையும் தாம் ஏற்றுக்கொள்ள தயாராக உள்ளதாகவும் திரு ஏக்நாத் ஷிண்டே தெரிவிதத்தார்.

<<<<<<>>>>>>

குஜராத்தில் குடிசை மற்றும் ஊரக தொழில் கொள்கையை அம்மாநில அரசு வெளியிட்டுள்ளது.

இன்று காந்தி நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாநில அமைச்சர் திரு **Balvantsinh Rajput** வெளியிட்டு பேசினார்.

அடுத்த ஐந்தாண்டுகளில் 12 லட்சம் பேருக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்க இந்த புதிய கொள்கை உதவிடும் என்று தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் விரைவில் புயலாக வலுவடைய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதன்பின்னர், அடுத்த இரு தினங்களுக்கு இந்த புயல் சின்னம் தமிழக கடற்கரையை நோக்கி நகரக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, தமிழகம் மற்றும் புதுவையில் அடுத்த நான்கு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 63 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

ஜம்முவில் தேசிய பாதுகாப்புப்படையின் நிரந்தர முனையத்தை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது.

தீவிரவாத செயல்களை முறியடிக்கும் வகையில் உள்துறை அமைச்சகம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஜம்மு காஷ்மீர் அரசு வகுத்த தீவிரவாத எதிர்ப்பு கொள்கையின் அடிப்படையில தேசிய பாதுகாப்புப்படையின் நிரந்தர முனையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

சபரிமலைக்கு செல்லும் பக்தர்களின் நலனை கருத்தில்கொண்டு ஹுப்ளி – கோட்டயம் இடையே அடுத்த மாதம் 5-ஆம் தேதி தொடங்கி, ஜனவரி மாதம் 9-ஆம் தேதிவரை வியாழக்கிழமைதோறும் சிறப்பு ரயில இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே கூறியுள்ளது.

மறுமார்க்கத்தில் இந்த சிறப்பு ரயில் அடுத்த மாதம் 6-ஆம் தேதி தொடங்கி, ஜனவரி மாதம் 10-ஆம் தேதி வரை வெள்ளிக்கிழமை தோறும் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வேயின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>>

இந்தியா - ஜப்பான் இடையே பொருளாதார பாதுகாப்பு தொடர்பான பேச்சுக்கள் டோக்கியோவில் நடைபெற்றன.

இந்தியாவின் சார்பில் வெளியுறவுத்துறை செயலர் திரு விக்ரம் மிஸ்ரி இந்த முதல் சுற்று பேச்சுக்களில் பங்கேற்றார்.

வர்த்தக உறவை மேலும் வலுப்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் இந்த பேச்சுக்களில் இடம்பெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

உலக இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Sydrela Das** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஸ்வீடனில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் 15 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 11-9, 4-11, 5-11, 7-11, 11-5, 11-7, 14-12 என்ற செட் கணக்கில் பிரான்சின் **Nina Guo Zheng** –ஐ வென்றார்.

-----------

உலக செஸ் சாம்பியன் போட்டியின் மூன்றாவது சுற்றில் இந்தியாவின் குகேஷ் - சீனாவின் **Ding Liren** –ஐ வென்றார்.

சிங்கப்பூரில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மூன்றாவது சுற்று முடிவில் இருவரும் தலா ஒன்றரை புள்ளிகளுடன் சமநிலையில் உள்ளனர்.

------------

ஆசிய கோப்பை ஜூனியர் ஹாக்கிப்போட்டியில் இந்தியா - தாய்லாந்து இடையேயான ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.
மஸ்கட்டில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் சற்றுமுன்வரை இந்தியா 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

------------------

ஆசிய கோப்பை துப்பாக்கிச்சுடும் போட்டியை நடத்துவதற்கான உரிமையை இந்தியா பெற்றுள்ளது.

---------------------

உலகக்கோப்பை கலப்பு குழு டேபிள் டென்னிஸ் போட்டியில் பங்கேற்பதற்கான இந்தியா **'B'** அணி அறிவிக்கப்பட்டுள்ளது.
**Manush Shah, Manav Thakkar** உள்ளிட்டோர் இதில் பங்கேற்றுள்ளனர்.
இப்போட்டி சீனாவின் **Chengdu** –வில் வரும் ஞாயிற்றுக்கிழமை தொடங்குகிறது.

-------------------

மெக்சிகோவில் நடைபெற்றுவரும் சர்வதேச ஜூனியர் மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மாயா ராஜேஷ்வரன் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

---------------------

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பந்து வீச்சு பிரிவில் இந்தியாவின் பும்ரா மீண்டும் முதலிடத்தை பிடித்துள்ளார்.

பேட்டிங் பிரிவில் **Yashasvi Jaiswal** இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

--------

உலக பாரா **Taekwondo Poomsae** சாம்பியன் போட்டியில் இந்தியா மூன்று தங்கம், இரண்டு வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கங்களை வென்றது.

பக்ரைனில் நடைபெற்ற இப்போட்டியில் கௌதம் யாதவ், மகேஷ் அங்காடி, கிருஷ்மா ராவத் தங்கப்பதக்கம் வென்றனர்.

ராஜ்குமார் ராஜேந்திரன் மற்றும் **Nekat Kaur** வெள்ளிப்பதக்கத்தையும், **Bishnoi Jeetin Kumar,** ஆனந்தி மற்றும் பிங்கி வெண்கலப்பதக்கம் வென்றனர்.

**<<<<<<END>>>>>>**